புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஆகஸ்ட் (AUGUST) 27, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 35 • விலை(PRICE) ரூ.6.00

# தொடர்கிறது, பார்ப்பன ஆதிக்கம்

**அரசியலிலும் சமூகத்திலும் பார்ப்பனியமும் மனுசாஸ்திரமும் அதிகாரம் பெற்றுவருகிறது; இதை உறுதிப்படுத்தும் நடப்பு நிகழ்வுகளின் தொகுப்பு.**

## திருட்டுக்கு 'தீண்டாமை' இல்லை

கோயில் கர்ப்பக் கிரகத்தில் "தீண்டாமை"யை ஆகமங்களைக்கூறி பின்பற்றி வருகிறது பார்ப்பனியம். அந்த 'கர்ப்பக்கிரகத்தில்' அம்மன் நகைகளை திருடுகிறார்கள் அர்ச்சகர்கள்.

ஆலந்தூர் பொன்னி அம்மன் கோயில் அர்ச்சகராக இருக்கும் ரெங்கநாதன் கருவறையில் இருந்த 190 கிராம் வெள்ளி கிரீடம், 270கிராம் வெள்ளி ஜல்லடை, 10 கிராம் தங்கத் தாலியை திருடி கைது செய்யப்பட்டுள்ளார். கோயில் அறங்காவலர் புகாரில் அர்ச்சகர் வீட்டில் இருந்த திருட்டுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பார்ப்பனர் அல்லாதார் கருவறையில் நுழைந்தால் தீட்டு; ஆனால் கருவறையில் நுழையும் பிறவி உரிமை பெற்றவர்களே கடவுளுக்கு ஏதும் சக்தி இல்லை என்பதை நன்கு உணர்ந்ததால் அம்மன் தாலியையே திருடி கைதாகிறார்கள்.

## சாக்கடைக் குழியில் இட ஒதுக்கீடு

கருவறையில் 'பிராமணர்'களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு இருப்பது போல் கழிவுநீர் அடைப்பைச் சுத்தம் செய்யும் வேலை பட்டியலினப் பிரிவினருக்கு மட்டுமே இட ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது. மனு சாஸ்திரம் தான் இப்போது நாட்டை வழிநடத்துகிறது. என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

திருவொற்றியூர் சாத்துமா நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு பள்ளம் தோண்டும் பணியில் ஈடுபட்ட பூமிநாதன் மண் சரிந்து பள்ளக்குழியிலேயே மரணம் அடைந்துள்ளார். பட்டியலின உழைப்பாளிகளின் இத்தகைய கொடூர மரணங்கள் தொடர்ந்து நடக்கின்றன.

இந்த வேலைக்கு ஒப்பந்தம் எடுத்திருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உயிருக்கு ஆபத்தான வேலைக்கு அரசு அதிகாரியான பொறியாளர் வாய் வழியாக அனுமதி வழங்கி இருக்கிறார். எவ்வித பாதுகாப்புக் கவசங்களும் இறந்து போன தொழிலாளிக்கு வழங்கப்படவில்லை. இந்த மனித உயிர்களுக்கு ஜாதிய சமூகத்தில் எந்த மதிப்பும் இல்லை. உலகில் எந்த ஒரு நாட்டிலும் இத்தகைய சம்பவங்கள் நடக்கிறதா? பார்ப்பனிய மனுவாத நோய் பீடித்துள்ள இந்தச் சமூகத்தில் தான் இவை நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

## கேட்பது கார் அல்ல; கழிப்பறைதான்!

தூய்மைப் பணியாளர்கள் அடிப்படைத் தேவைகளுக்காக நடத்தும் போராட்டம் சென்னையில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தூய்மைப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் சென்னை மாநகரம் நாறிப் போய்விடும்.

ஒப்பந்தக்காரர்களின் பிடியில் தூய்மைப் பணியாளர்கள் சிக்கித் தவிக்கிறார்கள். பணி நிரந்தரம், கழிப்பறை, ஓய்வறை வசதிகள், ஊதியத்துடன் விடுமுறை, மகப்பேறு விடுப்பு என்ற அடிப்படை வாழ்வுரிமைக்கு இவர்கள் போராடி வருகிறார்கள்.

சென்னை பெரியமேடு பகுதியில் தொடர்ந்து போராடும் தூய்மைப் பணியாளர்களை சீருடை அணியாத காவல்துறையினர் குண்டுகட்டாகத் தூக்கி அப்புறப்படுத்தி வருகிறார்களாம். கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் கைகளில் துடைப்பங்களோடு பணியாற்றும் பெண் தோழர்களுக்கு வார விடுமுறைக்கு ஊதியம் இல்லையா? கழிப்பறை சுத்தம் செய்பவர்களுக்குக் கழிப்பறை இல்லையா? இதைக் கேட்டால் காவல்துறை ஒடுக்கு முறையா?

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் இலவசம்; தூய்மைப் பணியாளர்களுக்கு வார விடுமுறை கூட இல்லை. இப்படி ஒரு ஜாதிய சமூகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதற்காக வெட்கப்பட்டாக வேண்டும்.

## ரூ.5 கோடியை திரும்பப் பெற்ற 'யோகா' ரவிசங்கர்

வாழும் கலை என்ற யோகா பயிற்சி நிறுவனங்களை உலகம் முழுதும் நடத்தி வருகிறார் கார்ப்பரேட் சாமியார் ஸ்ரீ.ஸ்ரீ ரவிசங்கர் என்ற பார்ப்பனர். 2016-ல் டெல்லி யமுனை நதிக்கரையில் உலக கலாச்சாரத் திருவிழா ஒன்றை ஆடம்பரமாக நடத்தினார். சூழல் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் இப்படி ஒரு சர்வதேச விழாவை நடத்துவதற்கு அனுமதி வழங்கியதே தவறு.



தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் 'யமுனை நதியைக் காப்போம்' என்ற பசுமை இயக்கத்தினர் இந்தத் திருவிழா, பசுமைச் சூழலை பாதித்திருப்பதைச் சுட்டிக்காட்டி முறையிட்டனர். வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் குற்றச்சாட்டை உறுதி செய்து ரூ. 5 கோடி அபராதம் விதித்தது. டெல்லி வளர்ச்சி ஆணையத்திடம் ரவிசங்கரின் வாழும் கலை அமைப்பு தண்டனைத் தொகையையும் செலுத்தி விட்டது.

அதன் பிறகு ரவிசங்கர் உச்சநீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். இப்போது வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் யமுனை நதிக்கரையில் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளானது உண்மைதான். அதற்கு ரவிசங்கர் நடத்திய உலகத் திருவிழா தான் காரணம் என்று நிரூபிக்கப்படவில்லை, என்று கூறியதோடு வசூலிக்கப்பட்ட தண்டத் தொகை ரூ.5 கோடியையும் ரவிசங்கரிடம் திருப்பித் தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

யமுனை நதிக்கரையைப் பாதுகாக்க தவறிவிட்டதாக உச்சநீதிமன்றம் டெல்லி வளர்ச்சி ஆணையத்துக்கும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஒரு அரசு அமைப்பிடம் கட்டிய அபராதத் தொகையைத் திருப்பி செலுத்த வேண்டும் என்ற தீர்ப்பு எல்லோருக்கும் கிடைத்துவிட முடியுமா? ரவிசங்கர் போன்ற கார்ப்பரேட் பார்ப்பனர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகைகள் கிடைக்கும். சூழலைக் கெடுத்தாலும் பார்ப்பனர் என்றால் பரிசுத் தொகை உண்டு.

## இது 'ஆரியக் கட்டளை'; அறக்கட்டளை அல்ல!

திருட்டு மோசடி வழக்குகள் என்றாலும் கூட பார்ப்பனர்கள் குற்றவாளிகளாக நடத்தப்படுவது இல்லை. 'பிராமணர்' கொலை செய்தால் அவர் உச்சிக் குடுமியில் ஒரு மயிரைப் பிடுங்கினால் போதும்; தண்டனை வழங்கக்கூடாது என்கிறது மனுசாஸ்திரம். அயோத்தி இராமர் கோயிலில் உண்டியல் நகை திருட்டு நாடுமுழுதும் சந்தி சிரிக்கிறது. குற்றம் சாட்டப்பட்டுள்ள ராமன் கோயில் அறக்கட்டளை ஒரு புனிதமான அமைப்பு என்றும் அதற்கு நீதிமன்றம் தாக்கீது அனுப்பக்கூடாது என்றும் அறக்கட்டளையின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் வாதிட்டார்.

உச்ச நீதிமன்றம் இந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை. நோட்டீஸ் அனுப்பிவிட்டது. அறக்கட்டளையின் உறுப்பினர்கள் சம்பத்ராய்; அணில் மிஸ்ரா, கோபால் ராவ் என்ற மூவரும் பார்ப்பனர்கள். உண்டியல் திருட்டில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட 8 பேரில் 5 பேர் பார்ப்பனர்கள். இதுகுறித்து ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது அவர் அளித்த பதில் என்ன தெரியுமா?ஸ்ரீ.ஸ்ரீ. ராம் ராம் என்ற ஒற்றை வரி ராம பஜனை தான் அவர் அளித்த பதில்.

பஜ்ரங்தள் தலைவராக இருந்த பார்ப்பனர் வினாய்க் கட்டியார் அறக்கட்டளை உறுப்பினர்களை ஏன் கைது செய்யவில்லை? நான் இதை மோடியிடம் புகார் செய்யப் போகிறேன் என்று பொங்கியிருக்கிறார். மோடி கைது செய்வாரா? ராமன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியவர் மோடி; திறப்பதற்கு தேதி குறித்தவர் மோடி; ராம பகவானே கனவில் வந்து கூறினார் என்றவர் மோடி; கொடியேற்றி வைத்தவர் மோடி; கோயில் கட்டும் பணிகளைத் தொடங்கி வைத்தவர் மோடி. ராமர் கோயில் அறக்கட்டளைக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளித்தவர் மோடி. கர்ப்பக் கிரகத்துக்கு வெளியே பலராமன் சிலைக்கு முதல் பூஜை செய்தவர் மோடி. ஆனால் ராமன் திருட்டு குறித்து கள்ள மவுனம் சாதித்து வருவதும் மோடி தான்! திருட்டு கொள்ளை என்றாலும் "பிராமணர்கள்" புனிதமானவராகவே இந்த நாட்டில் கருதப்படுகிறார்கள் இதுதான் பார்ப்பனியம். தீர்ப்பளித்த தலைமை நீதிபதி கனவிலும் மோடியின் கனவிலும் வந்த கனவு நாயகன் ராமன் களவாடிகளை ஏன் தடுக்கவில்லை?

## பொதுத்துறை நிறுவனங்களும் 'அவாள்' சொத்து

எந்த சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்படாத ஆர்.எஸ்.எஸ் அமைப்பு டெல்லியில் பல லட்சம் ஏக்கரில் 12 அடுக்கு மாளிகை கட்டியிருக்கிறது. திறப்பு விழாவில் அமித்ஷா, பாஜக தலைவர்கள் பங்கேற்றார்கள். சட்ட ஏற்பு இல்லாத ஒரு அமைப்புக்கு கட்டிட அனுமதி வழங்குவது பற்றியோ, கார்ப்பரேட் நிறுவனங்கள் நிதி வழங்குவது குறித்தோ எந்த கேள்வியையும் எவரும் இங்கே கேட்பதில்லை.


इंडियनऑयल
IndianOil
Indian Oil Corporation Limited

பொதுத் துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் கடந்த 10 ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ்-க்கு வழங்கிய நிதி ரூ.670 கோடி ரூபாய். 2015- 2025வரை இந்த நிறுவனம் 670 நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி இருக்கிறது. இதில் 20ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகள் மட்டும் ரூ.670 கோடி பெற்றுள்ளது என்ற செய்தி தகவல் உரிமை பெறும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டு இருக்கிறது.

ஆனால் கல்லூரி, மருத்துவமனைகளுக்கு தொண்டு செய்யும் நிறுவனங்களுக்கு வரும் நிதியைத் தடுக்க சட்டம் கொண்டு வருகிறார்கள். பார்ப்பனியத்தைப் பரப்பிட இங்கே சட்டங்களை மீறலாம் மனு சாஸ்திரமே வழிநடத்தும்.

## நீதிமன்றங்களில் பார்ப்பன ஆதிக்கம்

அண்மையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட 15 நீதிபதிகளில் பட்டியல் இனப்பிரிவினரோ, பிற்படுத்தப்பட்டோரரோ, இஸ்லாமியரோ, கிருத்துவரோ, பெண்களோ ஒருவர் கூட இடம் பெறவில்லை. 8 பேர் வழக்கறிஞர்கள் சங்கத்தினரிலிருந்தும், 7 பேர் பணிமூப்பு அடிப்படையிலும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த 8 பேரில் 2 பேர் பார்ப்பனர்கள். ஏற்கனவே 8 பேர் பார்ப்பன நீதிபதிகளாக உள்ளனர். இப்போது எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. மக்கள் தொகை பங்கினை விட பல மடங்கு அதிகம். இதில் 6 பேர் ஒன்றிய ஆட்சியின் சிபிஅய், அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளில் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள்.



உச்ச நீதிமன்றத்தில் 1980 வரை ஒரு பட்டியல் இனப்பிரிவினரும் பிற்படுத்தப்பட்டோர் நீதிபதிகளாக வர முடியவில்லை. இதுவரை நீதிபதிகளாக வர முடியாத சமூகத்திலிருந்து ஒரு நீதிபதி கூட நியமிக்கப்படவில்லை. இத்தகவல்களை வழக்குரைஞர் வாஞ்சிநாதன் நந்தனத்தில் நடைபெற்ற அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு மாநாட்டில் தெரிவித்தார்.

**தொகுப்பு: விடுதலை இராசேந்திரன்**

# பாஜகவைக் கண்டு தவெக நடுங்குவது ஏன்?

தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாட்டில் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் எம். சாய்குமார் அவர் பதவி ஓய்வு பெற்ற நிலையில் நீட்டிப்புக் கோரி ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி ஒப்புதலைப் பெற்றது த.வெ.க ஆட்சி. தமிழ்நாட்டில் கல்லூரி மாணவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிகளின் போராட்டங்களிலோ அல்லது காக்ரோச் ஜனதா பார்ட்டி (CJP) கட்சியின் போராட்டங்களிலோ பங்கேற்க விடாமல் தடுக்க வேண்டும் என்ற உத்தரவுக்குக் காரணமாக இருந்தவர்; இந்தத் தலைமைச் செயலாளர் தான் என்பது இப்போது ஆதாரத்துடன் வெளி வந்திருக்கிறது.

ஜூலை-28,ஆம் தேதி தலைமைச் செயலாளர் கூட்டிய சட்டம் ஒழுங்கு குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவரது ஆலோசனைப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டதோடு, ஆகஸ்ட்-17, ஆம் தேதி சிறப்பு அதிகாரியின் வழியாக கல்வி நிறுவனங்களுக்கு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இது மிகவும் அவசரமான நடவடிக்கை என்று அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடும் எதிர்ப்புக்குப் பிறகு அடுத்த இரண்டு நாட்களிலேயே ஆகஸ்ட்-19ஆம் தேதி இந்தச் சுற்றறிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது. திரும்பப் பெற்றதற்கான காரணம் தனக்குத் தெரியாது என்கிறார் கல்லூரிக் கல்வி கூடுதல் இயக்குனர் சித்தியா செல்வி. உயர்கல்வித்துறை செயலாளர் தீரஜ் குமார் தனது இயக்குனரகம் மட்டுமே இப்படி ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது என்றும் பள்ளிக்கல்வி துறையிடமிருந்தோ, பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இருந்தோ இப்படி ஒரு சுற்றறிக்கை வரவில்லை என்றும் கூறுகிறார். ஆனால் பல்கலைகழகங்களுக்கு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆட்சி நிர்வாகத்தில் கடும் குழப்பங்கள் நிலவுகின்றன.

இந்த அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களை கணக்கெடுக்கும் பணியில் குஜ்ஜிலியம்பாறை வட்ட ஆட்சி நிர்வாகம் ஈடுபட்டிருக்கிறது. இதேபோல் திராவிடர் கழகம் திட்டமிட்டிருந்த நீட் எதிர்ப்பு வாகனப் பரப்புரைக்கும் காவல்துறை அனுமதி மறுத்தது. நாடு முழுதும் கிளர்ந்து எழும் மாணவர் இளைஞர் எழுச்சியை ஒடுக்க வேண்டும் என்ற ஒன்றிய ஆட்சியின் செயல் திட்டத்தை தமிழ்நாட்டில் வேகமாக அமல்படுத்தத் துடிப்பதாகவே தெரிகிறது. தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் அமித் ஷா முன்னிலையில் பேசிய முதலமைச்சர் விஜய் தொகுதி மறுவரையறைத் திட்டத்தை முடக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தைக் குறிப்பிடவே இல்லை. அதிகாரிகள் தயாரித்த உரையில் இந்த முக்கிய கருத்து திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு இருக்கிறது. இதை மாற்றி அமைக்க முதலமைச்சரும் தயாராக இல்லை; ஆனால் தங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று அமைச்சர்கள் முட்டுக்கொடுத்து சட்டமன்றத்தில் கம்பு சுற்றுகிறார்கள்.

இவர்களுக்கு நாடாளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் இல்லை. இந்த நிலையில் தலைமைச் செயலாளரை அந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கோரிக்கையை காதில் வாங்குவதற்குக்கூட இந்த ஆட்சி தயாராக இல்லை. மோடி ஆட்சி பற்றி சட்டசபையில் பேசினால் உடனே அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று அமைச்சர்கள் பதறுகிறார்கள்

ஆட்சிக்கு ஆதரவு தரும் ஒரு கட்சிக்கு தலைமைச் செயலாளர் இப்படி நெருக்கடி உருவாக்குவதை இந்த ஆட்சி தொடர்ந்து பதவியில் நீட்டிக்க அனுமதிக்கப் போகிறதா? தமிழ்நாட்டில் ஆட்சியின் கொள்கைகளை முடிவெடுப்பது அதிகாரிகளா? ஆட்சியாளர்களா? என்ற கேள்வி எழுந்திருக்கிறது. தமிழ்நாடு அரசு இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

# மாநில உரிமைகளில் மற்றொரு குறுக்கீடு

மாநிலத்தில் உள்ள நிலங்களும் கனிமங்களும் மாநில உரிமைகளுக்கு உட்பட்டவை என்று சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் 18 வது பிரிவு திட்டவட்டமாக கூறுகிறது. இந்த மாநில உரிமையை பறிக்கும் மசோதாவை கடந்த ஆக-13, அன்று எந்த விவாதமும் இல்லாமல் நிறைவேற்றி இருக்கிறது ஒன்றிய ஆட்சி.

சுரங்கம் மற்றும் கனிமவள சட்டத் திருத்தத்தின் படி வரிவிதிப்பு உரிமையை ஒன்றியஆட்சி கையில் எடுத்து இருக்கிறது. மாநில அரசுகளின் வரி விதிக்கும் உரிமையை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது. மாநிலப் பட்டியலில் இடம்பெற்றுள்ள உரிமையைப் பறித்து கூட்டாட்சி தத்துவத்தையே குலைக்கிறது இந்தச் சட்டத் திருத்தம்!

முதலமைச்சர் விஜய் தனது சுதந்திர நாள் உரையில் ஒன்றிய ஆட்சியோடு நிர்வாக ரீதியாக ஒத்துழைப்போம் என்றும் மாநில உரிமையை விட்டுத்தர மாட்டோம் என்றும் பேசியிருக்கிறார். மாநிலங்களின் பட்டியலில் உள்ள ஒரு பிரச்சனையில் ஒன்றிய அரசு இப்படி தலையிடுவது மாநில உரிமையைப் பறிப்பதாகும் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் உணர்வாரா? இதற்கான கண்டனக் குரலை எழுப்புவாரா? இது நிர்வாக ஆணையா? அல்லது மாநில உரிமைப் பறிப்பா? என்பதை முதலமைச்சர் விளக்க வேண்டும்.

திமுக எம்.பி கனிமொழி இந்தச் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். கேரளாவில் ஆளும் காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாக இந்தச் சட்டத் திருத்தத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன.

மாநில உரிமைப் பட்டியலில் உள்ள ஒவ்வொரு துறையிலும் தலையிட்டு உரிமைகளைத் தொடர்ச்சியாகப் பறித்து வருகிறது பாஜக ஆட்சி!

# சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கார் சலுகையும், பெரியார் காட்டிய எளிமையும்!

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு காரும், அதனைப் பராமரிக்க மாதம் ஒரு இலட்சம் ரூபாய் செலவுத் தொகையும் வழங்கப்படும் என்று ஆக-19, அன்று சட்டசபையில் முதலமைச்சர் விஜய் அறிவித்தபோது, எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் அனைவரும் அதனை ஆதரித்தனர்.

தன்னிடம் கார் இல்லை என்று கூறி இந்த வேண்டுகோளை முன்வைத்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஜோதிமணியிடம் கார் உள்ளது என்பது, அவரது தேர்தல் பிரமாணப் பத்திரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஆதரித்துப் பேசிய இதர சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட விலையுயர்ந்த கார்கள் இருப்பதை ஏற்கனவே தேர்தல் பத்திரத்தில் ஒப்புக் கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

முன்பு சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டபோது அதனை மறுத்த பொதுவுடைமைக் கட்சியினர் கூட, தற்போது இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. திமுக மற்றும் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆடம்பரக் கார்களை வைத்திருப்பவர்கள் தான்; அவர்களிடமிருந்தும் "தங்களுக்குக் கார் வேண்டாம்" என்ற எதிர்ப்புக் குரல் சட்டசபையில் எழவில்லை. பிறகு திமுக,பாமக, சி.பி.அய் கட்சிகள் தங்களுக்கு கார் வேண்டாம் என்று மறுத்துவிட்டனர்.

மாத ஊதியம், தங்கும் விடுதி, இலவசப் பேருந்துப் பயணம், சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது வழங்கப்படும் தினசரி படி, ஓய்வூதியம் எனப் பல்வேறு சலுகைகள் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தவெக சட்டமன்ற உறுப்பினர்களைக் கார் இல்லாதவர்கள் போன்ற ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்குவதற்காகவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஊழலைத் தடுப்பதற்காகவே அரசே கார் வழங்குகிறது என்ற வாதமும் இங்கே முன்வைக்கப்படுகிறது. ஆனால், ஏற்கனவே கார்களை வைத்திருப்பவர்களுக்கு மீண்டும் அரசு சார்பில் கார் வழங்குவது என்பது கூட ஒரு சட்ட ரீதியான ஊழலாகும். தமிழக அரசு வழங்கும் இந்தக் கார் பரிசை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தில் முழுமையான நியாயம் உள்ளது. திமுக,பாமக,இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் புறக்கணித்துள்ளன.

இங்கே ஒரு வரலாற்று நிகழ்வைச் சுட்டிக்காட்ட வேண்டும். 93 வயது வரை தம் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் மக்களுக்காகச் சுற்றுப்பயணம் செய்தவர் தந்தை பெரியார். அவரது பயணத்திற்காகத் திராவிடர் கழகத் தோழர்கள் நிதி திரட்டிக் கார் வழங்கினார்கள்.

பெரியாரின் பரப்புரைப் பயணம் கார் வழியாகவே அமைந்தது. இறுதியில் அவருக்கு வழங்கப்பட்ட கார் பெட்ரோலில் இயங்குவதாக இருந்தது. பெட்ரோல் செலவு அதிகமாகிறது என்று கருதிய பெரியார், அதனை டீசல் என்ஜினுக்கு மாற்ற விரும்பினார். நீண்ட பயணத்திற்குப் பெட்ரோல் என்ஜினே வசதியாக இருக்கும் என்று தோழர்கள் கூறியும் பெரியார் கேட்கவில்லை. பெட்ரோல் காரில் பயணிப்பது ஆடம்பரச் செலவு என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அப்போதைய அமைச்சராக இருந்த ராஜாராம் அவர்களை வற்புறுத்தி, அந்த என்ஜினை டீசல் என்ஜினாக மாற்றினார். அப்படி மாற்றப்பட்ட பிறகு வண்டி பழுதாகிய நிலையில், ஒப்புக்கொண்ட பயணத்தை நிறுத்த விரும்பாத பெரியார், வண்டி பழுதுபார்த்து வரும் வரை ஒரு அம்பாசிடர் காரில் பயணித்தார். தனது உடலமைப்புக்கு ஏற்றதாக இந்தக் கார் பயணம் அமையாத காரணமாகவே அவரது குடலிறக்க நோய் தீவிரமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; அதுவே அவரது மரணத்திற்கும் காரணமாக அமைந்தது.

பொதுமக்கள் கொடுக்கும் பணத்தில் ஆடம்பர வாழ்வு வாழக்கூடாது என்பதில் தந்தை பெரியார் அந்த அளவிற்கு உறுதியாக இருந்தார். ஆனால், இன்று பல சொகுசு கார்களில் ஆடம்பரமாகப் பயணிக்கும் அரசியல் தலைவர்கள், அரசு ஒரு காரைத் தரும்போது "அதுதான் கெத்து' என்று வாங்குவதற்குத் துடிக்கிறார்கள்."

-இரா

# தேவை, பூணூலும் குடுமியும்

ராமஜென்ம பூமி அறக்கட்டளைக்கு முதல் முறையாக தலைமை நிர்வாக அதிகாரி நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டு மொத்தம் 18 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் பூணூல் அணிவீர்களா? குடுமி வளர்ப்பீர்களா? அசைவம் சாப்பிடுவீர்களா? சைவம் சாப்பிடுவீர்களா? மதுபானம் அருந்தும் பழக்கம் உள்ளதா? என்பன உள்பட பல்வேறு வித்தியாசமான கேள்விகள் கேட்கப்பட்டு உள்ளன.

இந்த பொறுப்புக்கு 5,300 பேர் விண்ணப்பம் செய்தனர். இதில் 18 பேர் இறுதி செய்யப்பட்டு நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். இவர்களின் வயது 50 முதல் 70-க்குள் உள்ளது. 18.8.2026 அன்று நேர்காணல் தொடங்கியது. நேர்காணலின் ஒரு பகுதியாக விண்ணப்ப படிவம் ஒன்றை நிரப்பி வழங்கினர். அதில் மொத்தம் 18 வகையான கேள்விகள் கேட்கப்பட்டு இருந்தன. அதில்தான் மேற்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. (ராமன் மாட்டுக்கறி சாப்பிட்டதையும், கள் குடித்ததையும் வால்மீகி இராமாயணம் கூறுகிறது).

இதுதவிர சம்பந்தப்பட்டவர்களின் குடும்பப் பின்னணி, அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எந்த வகையான பணி செய்கின்றனர். ராமன் கோயிலில் கூட்டம் அதிகரிக்கும்போது அதனைக் கட்டுப்படுத்துவது எப்படி? கடவுள் ராமன் மீதான நம்பிக்கை எப்படி உள்ளது?, ராமன் கோயிலின் எதிர்கால வளர்ச்சி குறித்த திட்டம் தொடர்பான கேள்விகள் உள்ளிட்டவை கேட்கப்பட்டனவாம். அதாவது 'பிராமண' குலத்தில் பிறந்தவரா என்பதைக் கண்டறியவே இந்தக் கேள்விகள். ராமன் கோயிலைக் கட்டிய கட்டடத் தொழிலாளிகளிடம் இந்தக் கேள்விகளைக் கேட்பார்களா? இதுதான் பார்ப்பனியம்.




பேராசிரியர் சரஸ்வதி அவர்களின் அணிந்துரையோடும் 18 பெண்ணியக் கருத்தாளர்களின் கட்டுரைகளோடும் இந்நூல் நன்செய் பதிப்பகத்தின் சார்பில் வெளியீடுபட்டுள்ளது. சாதாரண அஞ்சலில் பெற ரூபாய் 100-ம், பதிவஞ்சலில் பெற ரூபாய் 150-ம் அனுப்புங்கள். தொடர்புக்கு: 9788543772

# தொகுதி அதிகரிப்பு தீர்வாகுமா?

***தொகுதி மறுவரை சட்டத்தில் 50 விழுக்காடு இடங்களை உயர்த்த ஒன்றிய ஆட்சி முன்வரும்போது அதை ஏற்பதால் உருவாகும் நெருக்கடிகளை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேட்டில் 17.04.2024 அன்று எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்...***

ஒவ்வொரு மாநிலமும் தற்போது பெற்றுள்ள பிரதிநிதித்துவத்தை இழக்கக் கூடாது என்ற அடிப்படையில் மக்களவையின் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கையை 550 இலிருந்து 850 ஆக உயர்த்தும் முன்மொழிவும் பிரச்சினைக்குரியது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் அதிகாரம் என்பது உறுப்பினர்களின் முழுமையான எண்ணிக்கையில் மட்டும் இல்லை; மொத்த அவை உறுப்பினர்களில் ஒரு மாநிலம் பெற்றிருக்கும் ஒப்பீட்டு பங்கிலும் உள்ளது. உதாரணமாக:

கேரளா தனது 20 இடங்களையும் தக்கவைத்துக்கொண்டாலும், 543 உறுப்பினர்களைக் கொண்ட தற்போதைய மக்களவையில் அதன் பங்கு 3.68%. 850 உறுப்பினர்களாக விரிவுபடுத்தப்பட்டால் அதே 20 இடங்களின் பங்கு 2.35% ஆகக் குறையும். தமிழ்நாட்டின் இடங்கள் 39 இலிருந்து 49 ஆக அதிகரித்தாலும், அதன் ஒப்பீட்டு பங்கு 7.18% இலிருந்து 5.78% ஆகக் குறையும். மாறாக, பீகாரின் இடங்கள் 40 இலிருந்து 79 ஆக அதிகரிக்கும்; அதன் ஒப்பீட்டு பங்கு 7.37% இலிருந்து 9.32% ஆக உயரும். உத்தரப் பிரதேசத்தின் இடங்கள் 80 இலிருந்து 143 ஆக அதிகரிக்கும்; அதன் ஒப்பீட்டு பங்கு 14.73% இலிருந்து 16.86% ஆக உயரும்.

எனவே, மிகவும் சமமான அணுகுமுறை என்ன? என்பது ஒவ்வொரு மாநிலமும் தற்போது கொண்டுள்ள மொத்த மக்களவைப் பிரதிநிதித்துவத்தின் சதவீதப் பங்கைப் பாதுகாத்து, விரிவுபடுத்தப்பட்ட மக்களவையில் அதே விகிதத்தை நீடிக்கச் செய்வதாகவும் ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா மற்றும் பியூஷ் கோயல் இதுபோன்ற உறுதியை வாய்மொழியாக வழங்கியிருந்தாலும், அரசியலமைப்புத் திருத்த மசோதாவின் உரையில் அது இடம்பெறவில்லை. இந்த முன்மொழிவை அரசியலமைப்புச் சட்ட ரீதியாக பலவீனமானதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் ஆக்குகிறது.

850 உறுப்பினர்களைக் கொண்ட அவை நடைமுறையில் நிர்வகிக்க முடியாத அளவுக்கு பெரிதாகிவிடும். ஐந்து ஆண்டு காலத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கே போதுமான வாய்ப்பு கிடைக்காமல் போகலாம்.

இதனால்:
★ அர்த்தமுள்ள விவாதம் குறையும்;
★ நாடாளுமன்றக் குழுக்களின் செயல்திறன் பலவீனமடையும்;
★ கட்சிகளின் கொறடா உத்தரவுகள் மீது சார்ந்திருப்பது அதிகரிக்கும்;
★ நிர்வாகத்தின் கட்டுப்பாடு அதிகரிக்கும்.

உலக அனுபவமும் உறுப்பினர்கள் எண்ணிக்கையின் கட்டுப்பாட்டையே ஆதரிக்கிறது. அமெரிக்க பிரதிநிதிகள் அவை 1929 முதல் 435 உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையிலேயே உள்ளது; இதற்கிடையில் அந்நாட்டின் மக்கள் தொகை கிட்டத்தட்ட மூன்று மடங்காகியுள்ளது.

இத்தாலி தனது பிரதிநிதிகள் அவையின் உறுப்பினர் எண்ணிக்கையை 630 இலிருந்து 400 ஆகக் குறைத்துள்ளது. ஜப்பானும் தனது உறுப்பினர் எண்ணிக்கையை 465 இலிருந்து 420 ஆகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.



**தொகுதிமறுவரையறை உத்தரவுகள் மீது நாடாளுமன்றமும் மாநில சட்டமன்றங்களும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆய்வுகள் மேற்கொளும் உரிமை வேண்டும்.**

## பெண்களுக்கான இடஒதுக்கீடு

131வது அரசியலமைப்புத் திருத்த மசோதா, 106வது அரசியலமைப்புத் திருத்தம் (2023) மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 334A பிரிவையும் திருத்த முன்மொழிகிறது. இந்தப் பிரிவு பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீட்டை வழங்குகிறது. ஆனால் அதன் அமலாக்கத்தை மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பிந்தைய தொகுதிமறுவரையறையுடன் இணைக்கிறது. இந்த இணைப்பு தேவையற்றதும் தவறாக வழிநடத்தக்கூடியதுமாகும்.

தற்போதைய 543 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையிலேயே சுழற்சி முறையைப் பயன்படுத்தி பெண்களுக்கான இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியலமைப்பில் எந்தத் தடையும் இல்லை. இந்தச் சூழலில் பெண்களின் அதிகாரமளிப்பை முன்னிறுத்துவது, உண்மையில் 1971ஆம் ஆண்டு தொகுதி முடக்கத்தை நீக்குவதையும், கூட்டாட்சிச் சமநிலையை சீர்குலைக்கக்கூடிய சமத்துவமற்ற தொகுதிமறுவரையறையை நியாயப்படுத்துவதையும் மறைக்கும் ஒரு திரை போலத் தோன்றுகிறது.

## நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஆட்சியின் பொறுப்புணர்வை மீட்டெடுத்தல்

நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட மசோதாக்கள் ஜனநாயக நியாயத்தன்மைக்கும் கூட்டாட்சிக் கட்டமைப்புக்கும் ஏற்படுத்தும் தீவிரமான ஆபத்துகளைத் தாண்டியும், தொகுதிமறுவரையறையின் அரசியலமைப்புச் சட்ட வடிவமைப்பில் ஆழமான குறைபாடுகள் இருப்பதை வெளிப்படுத்துகின்றன. முன்மொழியப்பட்ட தொகுதிமறுவரையறை மசோதா, 2026 உள்ளிட்ட தொகுதிமறுவரையறைச் சட்டங்களின் கீழ், தொகுதிமறுவரையறை ஆணையத்தின் கட்டுப்பாடுகளுக்குள் வந்துவிடுகிறது. தொகுதி மறுவரையறை ஆணையம் எடுக்கும் தொகுதிப் பங்கீடுகளுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை;

★ மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் தேவையில்லை;
★ ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதலும் தேவையில்லை.

இதனுடன், நீதித்துறையும் தலையிட முடியாது.

“அரசியல் தலையீட்டிலிருந்து தொகுதிமறுவரையறையைப் பாதுகாப்பது” என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள தற்போதைய அமைப்பு, உண்மையில் ஒன்றிய அரசுக்கே அதிக அதிகாரத்தை வழங்குகிறது. ஏனெனில் தொகுதிமறுவரையறை ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிக்கும் முழுமையான அதிகாரம் ஒன்றிய அரசிடமே உள்ளது. இதன் விளைவாக, அதன் முடிவுகள் இறுதியானவை; பெருமளவு நீதிமன்றத்தில் வழக்காட முடியாதவை; திருத்துவதற்கான வாய்ப்பும் மிகக் குறைவானவை என்ற நிலையில் ஒரு பொறுப்பற்ற அமைப்பு உருவாகிறது.

## சர்வதேச அனுபவம்

தொகுதிமறுவரையறை ஆணையத்துக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரங்களை உலகநாடுகள் ஏற்கவில்லை.

**அமெரிக்கா:** அமெரிக்காவில் தேர்தல் தொகுதி எல்லைகள் மாநில சட்டமன்றங்களின் மூலம் சட்டமாக்கப்படுகின்றன. அவை நீதிமன்றத்தின் முழுமையான ஆய்வுக்கு உட்பட்டவை. தொகுதி எல்லைகளை அரசியல் நோக்கத்திற்காகத் திரிப்பதையும் இனப் பாகுபாட்டையும் கட்டுப்படுத்த நீதிமன்றங்கள் நேரடியாகத் தலையிடுகின்றன.

**கனடா:** கனடாவில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு சுயாதீன கூட்டாட்சி ஆணையம் செயல்படுகிறது. அந்த ஆணையங்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. நாடாளுமன்றக் குழுக்கள் உறுப்பினர்கள் எழுப்பும் எதிர்ப்புகளை ஆய்வு செய்து அவற்றை ஆணையங்களிடம் தெரிவிக்கின்றன. இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் ஆணையங்களிடமே இருந்தாலும், அவற்றின் முடிவுகள் நீதித்துறை மறுஆய்வுக்கு உட்பட்டவை. மாநில சட்டமன்றங்களுக்கான தொகுதிமறுவரையறையிலும் இதேபோன்ற நடைமுறைகள் உள்ளன.

**ஜெர்மனி மற்றும் ஜப்பான்:** ஜெர்மனி மற்றும் ஜப்பானில் தொகுதிமறுவரையறை அடிப்படையே சட்டமன்றத்தின் செயல்பாடாகும். நிபுணர் ஆலோசனைக் குழுக்கள் அதற்கு வழிகாட்டுகின்றன. தொகுதி எல்லைகள் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலமே சட்டப்பூர்வ வலிமையைப் பெறுகின்றன. அதேவேளை, சமமற்ற பிரதிநிதித்துவத்தை ஆய்வு செய்ய நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உள்ளது.

## நீதிபதி குரியன் ஜோசப் குழுவின் பரிந்துரைகள்

தொகுதிமறுவரையறை சுயாதீனமாக இருக்க வேண்டும்; அதே சமயம் அதனை எதிர்த்து முறையிடவும், தவறுகள் இருந்தால் திருத்தவும் முடிய வேண்டும் என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான ஒன்றிய-மாநில உறவுகள் குழு, தனது பிப்ரவரி 2026 அறிக்கையின் முதல் பகுதியில் முக்கியமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதில் 82, 170 மற்றும் 329(a) ஆகிய அரசியலமைப்புப் பிரிவுகளைத் திருத்தி, வரையறுக்கப்பட்ட ஆனால் அர்த்தமுள்ள நிறுவன ரீதியான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வரைவு தொகுதிமறுவரையறை உத்தரவுகள் மீது நாடாளுமன்றமும் மாநில சட்டமன்றங்களும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

***கனடாவின் “Dialogue Model” அடிப்படையில்:***

★ சட்டமன்றக் குழுக்கள் எதிர்ப்புகளை ஆய்வு செய்ய வேண்டும்;
★ அவற்றை தொகுதிமறுவரையறை ஆணையத்திடம் தெரிவிக்க வேண்டும்;
★ ஆணையம் இறுதி உத்தரவை வெளியிடுவதற்கு முன்பு காரணங்களுடன் கூடிய பதில்களை வெளியிட வேண்டும்.

இறுதி முடிவு ஆணையத்திடமே இருக்கும். இதன் மூலம் சட்டமன்றங்களுக்கு கருத்து தெரிவிக்கும் உரிமை இருக்கும்; ஆனால் தடுக்கும் அதிகாரம் இருக்காது.மேலும், தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பு அரசியலமைப்பு மற்றும் அதிகார வரம்பு தொடர்பான காரணங்களுக்காக, கட்டுப்படுத்தப்பட்ட நீதித்துறை மறுஆய்வை அனுமதிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைமுறை தொடங்கிய பிறகு நீதிமன்றத் தலையீட்டுக்கான தடையைத் தொடர்ந்து பாதுகாக்கலாம். அரசியலமைப்புத் திருத்தங்கள் நடைமுறைக்கு வரும் வரை, குறைந்தபட்சம் புதிய தொகுதிமறுவரையறைச் சட்டத்திலாவது:

★ சட்டமன்ற ஆய்வு;
★ காரணங்களுடன் கூடிய பதில்கள்

போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்கிறது.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அரசியல் நிர்ணய சபையில் H. V. காமத், எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமும் இறுதியாக நிறைவேற்றப்படுவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் அவகாசம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் மூலம் மக்கள் போதுமான தகவல்களுடன் விவாதிக்கவும் கருத்து தெரிவிக்கவும் வாய்ப்பு கிடைக்கும் என்றார். இந்தியாவின் அரசியலமைப்பு வரலாற்றில் தேவையற்ற அவசரத்தில் பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் 2026ஆம் ஆண்டின் 131வது அரசியலமைப்புத் திருத்த மசோதாவைப் போல கவலைக்குரிய ஒன்று அரிது. எனவே, ஒன்றிய அரசு இந்த மசோதாவையும் அதனுடன் தொடர்புடைய பிற சட்ட மசோதாக்களையும் திரும்பப் பெற வேண்டும்.

மேற்கூறிய கவலைகளைக் கருத்தில் கொண்டு புதிய மசோதா கொண்டுவரப்பட வேண்டும். அந்த மசோதா குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, பரந்த அளவிலான, தகவலறிந்த மற்றும் அர்த்தமுள்ள ஆலோசனைகள் பெறப்பட வேண்டும். இறுதிப் பார்வையில், தொகுதிமறுவரையறை என்பது வெறும் கணிதக் கணக்கீட்டு நடவடிக்கை அல்ல; அது அரசியல் சட்ட நுண்ணறிவின் வெளிப்பாடாகும்.

அது குடிமக்களின் சமத்துவத்தையும் மாநிலங்களின் கண்ணியத்தையும் ஒருங்கிணைத்து, பன்முகத்தன்மை கொண்ட இந்திய ஒன்றியத்தின் நுட்பமான கூட்டாட்சிச் சமநிலையைப் பாதுகாக்க வேண்டும். இன்றைய சூழல் அரசியல் அவசரத்தை அல்ல, ஆழ்ந்த சிந்தனையை; வேகத்தை அல்ல, விரிவான ஆலோசனையைக் கோருகிறது. அரசியலமைப்பு மக்களின் நம்பிக்கைக்குரிய சாசனமாகத் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால், அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் கொள்கையின் அடிப்படையில் — நியாயம், கட்டுப்பாடு மற்றும் குடியரசின் நீடித்த ஒருமைப்பாட்டின் மீதான உறுதியான பற்றுடன் — வழிநடத்தப்பட வேண்டும்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# சேலம்-நாகர்கோவில் பரப்புரைப் பயணக் குழு கலந்துரையாடல் கூட்டம்!





பயணத்தின் நிறை, குறை குறித்து விவாதிக்கப்பட்டு, வரவு செலவும் சரிபார்க்கப்பட்டது. கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், மாவட்டப் பொருளாளர் சம்பத், மாவட்ட அமைப்பாளர்கள் அண்ணாதுரை, அன்பு, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மேட்டூர் நகரத் தலைவர் மார்டின், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, சீனிவாசன், காளியப்பன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரத் தலைவர் செந்தில், கொளத்தூர் ராஜா, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் நாகராஜ், கவியரசு, கொளத்தூர் கணேசன், செந்தமிழ் கலையமுதன், கோகுலகண்ணன், கே. ஆர். தோப்பூர் கண்ணன், ஆகியோர் பங்கேற்றனர்.

எஸ்.எம்.எஸ் டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் தவமணி 10 நாற்காலிகளை மேட்டூர் பெரியார் படிப்பகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். பயணக் குழுத் தோழர்களுக்கு சேலம் மாவட்டப் பொருளாளர் சம்பத் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

# ச.குப்பம்மாள் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு!

முன்னாள் கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் பெரியார் வெங்கட் தாயார் மறைந்த ச. குப்பம்மாள் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியார் வெங்கட் இல்லத்தில் ஆக-4, செவ்வாய்கிழமை அன்று காலை 10 மணியளவில் மு.நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்விற்கு கி.ஆனந்தன், இரா. கார்மேகம், வீ. முருகன், சி. சாமிதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.


மக்கள் அதிகாரத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் ஆ.இராமலிங்கம், கழக விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ. ஆ. இளையரசன், மாவட்டத் தலைவர் க.மதியழகன், ந. வெற்றிவேல், தபெதிக செ. பிரபு, திராவிடர் கழக சண்முகம், தலைமைக்குழு உறுப்பினர் ந. அய்யனார் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மறைந்த ச. குப்பம்மாள் அவர்களின் படத்தை திறந்துவைத்து நினைவேந்தல் உரை நிகழ்த்தினார்.




மா. குமார் நன்றியுரையாற்றினார். வேலூர் மாவட்டச் செயலாளர் இரா. சிவா, குப்பம்மாள் அவர்களின் கணவர் மு.சத்தியமூர்த்தி மகன்களான ச. ஜெயபால், தனபால், ச. ஏழுமலை, மகள் வீரம்மாள் மற்றும் கழக தோழர்கள் இரா. வீரமணி, ஏ. ஜெயப்பிரகாஷ், மு. குமரேசன், தோழர் அன்பு, கு. பாபா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை மாவட்டச் செயலாளர் க.ராமர் ஒருங்கிணைத்தார்.

# மோகன் பகவத் வருகைக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு

வாசிங்டன், ஆக.21, ஆர். எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் வரும் 29 ஆம் தேதி நியூயார்க்கில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க செல்ல உள்ளார். இந்நிலையில், பன்னாட்டு மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையத்தின் தலைவர் ஆசிப் மஹ்மூத் மற்றும் ஆணையர் ஜீன் மில்ஸ் ஆகியோர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு மீது அமெரிக்காவில் பொருளாதார தடை விதிக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளனர்.



அவர்களின் கருத்துகள், ஆணையத்தின் அதிகாரப்பூர்வ ‘எக்ஸ்’ தளத்தில் (20.8.2026) அன்று பதிவிடப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்திய பிரதமர் மோடி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உறுப்பினராக உள்ளார். இந்த அமைப்பு பல துணை அமைப்புகளைக் கொண்டது. அந்தத் துணை அமைப்புகள் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினர் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளன. இப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அமெரிக்கா வர திட்டமிட்டுள்ளார். முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வன்முறைச் செயல்களிலிருந்து பகவத்தின் வருகையை தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது.

எனவே, ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் இந்திய அரசாங்கத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு உயர்மட்ட சந்திப்புகள் அல்லது ராஜதந்திர மரியாதைகள் மூலம் கவுரவம் அளிக்கப்படக் கூடாது. அதற்குப் பதிலாக மத நம்பிக்கை சுதந்திரம் மீறல்களுக்குப் பொறுப்பானவர்களாகக் கண்டறியப்படும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் மீது தடை விதிப்பதில் அமெரிக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.

# கருத்தரங்கு, குடும்ப விழா நிகழ்வுகளுக்கு தயாராகிறது சென்னை மாவட்டம்



சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், ஆக-23 அன்று மாலை 6 மணிக்கு கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

சமகால அரசியல் சூழ்நிலைகள் குறித்தும், கழகச் செயல்பாடுகள் குறித்தும் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார். “கழகத் தோழர்களுக்கிடையே நட்புணர்வையும், ஒருங்கிணைப்பையும் வலிமையாக்கும் நோக்கத்துடன் இந்தப் பரப்புரைப் பயணத்தை ஒவ்வொரு ஆண்டும் நடத்துகிறோம். அந்த நோக்கத்தில் இந்தப் பயணங்கள் கழகத்துக்கு புத்துணர்வை உருவாக்கி வருகிறது”என்றார். கட்சி அரசியல் வேண்டாம் என்று பெரியார் இயக்கம் நோக்கி, வரும் தோழர்கள் அரசியல் கட்சிகளின் பண்புகளாகிய சுய விளம்பரம், தன்முனைப்புகளை தவிர்த்துக் கொள்கை உணர்வுகளுக்கு முன்னுரிமை தரும் உளவியலை வளர்த்துக் கொள்ள வேண்டும். கழகத்தின் பதவிகள் செயல்பாட்டுக்கு உரியவைகளே தவிர, அதிகார மய்யம் அல்ல என்ற உணர்வோடு தோழமையை வளர்த்தெடுக்க வேண்டும்” என்றார்.

1996 ஆம் ஆண்டிலிருந்து பெரியார் திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகமாக பயணித்து களப்பணிகளில் முன்னிலையில் நிற்கிறது சென்னை மாவட்டக் கழகம். பல்வேறு வழக்குகளில் மாதக்கணக்கில் சிறையில் இருந்த பல தோழர்கள் நமது கழகத்தில் இருக்கிறார்கள். இலட்சியத்துக்கு தந்த இந்த விலையை அவர்கள் அமைதியாக ஏற்றுக்கொண்டு களப்பணி ஆற்றுகிறார்கள் என்று குறிப்பிட்டார் விடுதலை ராசேந்திரன், தந்தை பெரியார் திராவிடர் கழகமும், திராவிடர் விடுதலைக் கழகமும் தனித்தனி அமைப்புகளாக செயல்பட திட்டமிட்டபோது இலகுவான நட்புகளோடு பிரிந்ததைப் பலரும் பாராட்டியதை குறிப்பிட்டார்.

அடுத்து கழகம் நடத்த இருக்கும் குடும்ப விழாக்களை நடத்துவதற்கான திட்டமிடல்களை தொடங்க வேண்டும் என்றார். திறந்த போட்டியாளர்கள் என்ற போர்வையில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பனர்கள் போராடத் தொடங்கி இருப்பதையும், கரப்பான்பூச்சி ஜனதா கட்சி இளைஞர்களின் எழுச்சி ஒன்றிய ஆட்சியாளர்களை மிரள வைத்திருப்பதையும் சுட்டிக்காட்டினார். தொகுதி மறுவரையறையைச் சட்டமாக்கி விட்டால் பாஜகவினரின் ஆட்சி மட்டுமே காலம் காலத்திற்கும் உறுதிப்படுத்தப்படும் என்ற ஆபத்தையும் அவர் விளக்கிக் கூறினார்.

பரப்புரைப் பயணத்தில் சென்னை அணியின் செயல்பாடுகளை தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் பாராட்டினார், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி பேசுகையில், "பெரியாரைப் புறக்கணிக்கும் திராவிட எதிர்ப்பாளர்களை எச்சரிக்கையாக அணுக வேண்டும்" என்றார். மாநாட்டுப் பணிகளை மேற்கொண்ட தோழர்களைப் பாராட்டினார்.

"சென்னையில் நடந்த நீட் எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர் கழகத்தின் பங்கு குறித்தும், புத்தகக் கண்காட்சிக்கு புதிய தலைப்புகளில் நூல்களைக் கொண்டு வருவது குறித்தும் மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் தன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். இளைஞரணி களப்பணிக்கு காத்திருக்கிறது. வேலைத்திட்டங்களைத் தலைமை தர வேண்டும் என்று, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண் கேட்டுக்கொண்டார்.

சமூக வலைதளங்களில், சிறுசிறு வீடியோக்கள் மூலம் கொள்கைப் பிரச்சாரம் செய்வது குறித்தும், அதன் செயல்படும் விதம் குறித்தும், நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர் ர.பிரகாசு விளக்கினார். நீட் எதிர்ப்புப் போராட்டங்களின் அனுபவங்களையும், சென்னை கோயம்பேடு திருவள்ளுவர் இல்லத்தில் நடைபெற்ற போராட்டத்துக்கு, தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன் மெத்தை அமைத்துக் கொடுத்தார். போராட்டத்தை ஆதரிக்க வருகை தந்தவர்களுக்கு மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி உணவு ஏற்பாடு செய்திருந்ததையும் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு பகிர்ந்து கொண்டார். கழகத் தோழர்களோடு கலந்துரையாடவும், இணைந்து பயணிக்கவும், இந்தப் பயணம் பெரிதும் பயன்பட்டது என்றார் இரண்யா. தனது பயண அனுபவங்களை உணர்வுபூர்வமாக பகிர்ந்து கொண்டார்.

வடசென்னை மாணவர் கழக அமைப்பாளராக தோழர் ‘குடிஅரசு’ செயல்படுவார் என்று கழகப் பொதுச்செயலாளர் அறிவித்தார். கழகத் தோழர் விஜயன் அவர்களின் மகன் இரண்யன் 23-வது பிறந்தநாளை முன்னிட்டு ரூ.1000 கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. **– நமது செய்தியாளர்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 27, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran